Teacher Reflection

# காண்போம்! கற்போம்!

வகுப்பு: 3, பாடம்: 6, தமிழ்

**பாட நோக்கம்**: அறிவிப்புகள், விளம்பரங்கள், சாலைக் குறியீடுகளை அறிதல் மற்றும் உருவாக்குதல்



அறிவிப்புகளை வாசித்தல்

**ஆயத்தப்படுத்துதல்:** மாணவர்கள் சிறு சிறு விளம்பரத்தாள்களை வாசித்துப் பின் உரையாடலில் பங்கேற்றல். மாதிரி வினாக்கள் - விளம்பரத்தாளில் என்னென்ன தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன? விளம்பரத்தாளில் இடம் மற்றும் நாள் ஏன் கொடுக்கப்படுகிறது? விளம்பரத்தாள் எதற்கு உதவுகின்றது?

**கற்றல் செயல்பாடுகள்:**

மாணவர்கள் விலங்குகளின் முகமூடிகளை அணிந்துகொண்டு வகுப்பறையை ஒரு சரணாலயம் போல் அமைத்தல். சரணாலயத்தில் என்னென்ன அறிவிப்புப் பலகைகள் வைக்க வேண்டும், அந்த அறிவிப்புப் பலகைகளின் அவசியத்தையும் அவை இல்லையென்றால் ஏற்படும் விளைவுகளையும் விவாதித்தல்.

ஆசிரியர் சாலை போக்குவரத்துக் குறியீடுகளைக் கரும்பலகையில் வரைந்து அவற்றின் அர்த்தங்களையும் முக்கியத்துவத்தையும் விவாதித்தல். பள்ளிக்கு வெளியே அழைத்துச்சென்று சாலைக் குறியீடுகளைக் காட்டி, நேர்முக விளக்கம் அளித்தல்

**மதிப்பிடுதல்:** மாணவர்களின் புரிதலை அறிய ஆசிரியர் வினாக்களை எழுப்பியோ அல்லது செயல் திட்டங்களை அளித்தோ மதிப்பிடலாம்.

**தொடர்பணி:** மாணவர்களிடம் சாலை அறிவிப்பு விளம்பரங்களில் ஏதேனும் ஒன்றினை அட்டை அல்லது காகிதத்தில் வரைந்து வரச் சொல்லுதல். மாணவர்கள் நேரடி அனுபவம்



சாலைக்குறியீடுகளை கண்டு அறிதல்

பெற அருகில் உள்ள அஞ்சல் அலுவலகம், வங்கி, மருத்துவமனை போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள அறிவிப்புப் பலகைகள், குறியீடுகள் மற்றும் விளம்பரப் பலகைகளைக் காட்டி விளக்கம் அளிக்கலாம்.



**வ. சுமதி,**
தொ.ப.ஆ, அ.தொ.ப.
அரியாங்குப்பம் பேட்



**சு. தமிழரசி**
தொபஆ, அதொப
தானம்பாளையம்